வாசிக்க: திருப்பாடல் 97

"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் உங்கள் நடத்தையில் எல்லாம் பரிசுத்தராயிருங்கள்" (1 பேது 1:15)

கடவுள் சர்வ வல்லவர், சர்வ வியாபகர், சர்வ ஞானி, அன்புள்ளவர், மாறாதவர், பரிசுத்தர். ஆனால் வேதத்திலுள்ள தொழுகைப்பாடல்கள் எதிலும் மும்முறை சொல்லப் பட்டுள்ள கடவுளின் குணாதிசயம் அவரது பரிசுத்தமே. இதற்கோர் எடுத்துக்காட்டு பழைய ஏற்பாட்டிலும் இன்னொன்று புதியதிலும் உண்டு. ஏசாயா கண்ட தரிசனத்தில் சேராபீன்களெனும் விண்ணகவாசிகள் ஒருவரையொருவர் பார்த்து, "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" எனக் குரலெழுப்பினர் (ஏசா 6:3). யோவா னுக்குக் கிடைத்த விண்ணகத் தரிசனத்தில் நான்கு உயிரினங்கள், "சர்வ வல்ல தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என இடையறாது சொல்லிக் கொண்டிருந்தன (வெளி 4:8).

எபிரெய மொழியில் பரிசுத்தர் என இருமுறை சொன்னால் மகா பரிசுத்தர் எனப் பொருள்படும். மும்முறை அதைச் சொல்லுவது அதற்கு மிஞ்சமுடியாத உச்ச நிலையைக் குறிப்பிடுகிறது. கிரேக்க மூல மொழிப் பிரதிகள் பலவற்றில் "பரிசுத்தர்" எனும் சொல் வெளிப்படுத்தல் 4:8இல் ஒன்பது முறை வருகிறது! ஆம், தேவனது அத்தனைக் குணாதிசயங்களிலும் தலைதூக்கி நிற்பது அவரது பரிசுத்தமே!

இஸ்ரவேலர் செங்கடலைத் தாண்டிச் சென்றது அற்புதங்களிலெல்லாம் அற்புதம். ஆறுகள் அவ்வப்போது வற்றுவதுண்டு; ஆனால் கடல் இரண்டாய்ப் பிளந்ததைக் கேள்விப்பட்டதுண்டோ? கடல் நடுவில் காய்ந்த தரையில் அவர்கள் அற்புதப் பவனி சென்றதையடுத்து மோசேயும் இஸ்ரவேல் மக்களும் ஆண்டவருக்கு அழியாப் பாடல் ஒன்று பாடினர். அப்பாடலின் உச்சக்கருத்து அதின் நடுவில் இதோ: "கர்த்தாவே, தேவர்களில் உமக்கு நிகரானவர் யார்? **பரிசுத்தத்தில்** மகத்துவமுள்ளவரும் துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?" (யாத் 15:11). எகிப்தியர் மற்றும் வேற்றினத்தவரின் தெய்வங்களைக் குறித்து அவர்கள் கேள்விப்பட்டிருந்தனர். ஆனால் யேகோவாவாகிய கடவுளிலோ இணையற்ற தொன்றைக் கண்டனர்.

வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு தேவத்துவத்தின் திரியேகத்துவத்தை நாம் விசுவாசிக்கிறோம். கடவுள் ஒருவரே; அவர் பிதாவாகிய கடவுள், குமாரனாகிய கடவுள், பரிசுத்த ஆவியானவராகிய கடவுள் என்று மூன்று நபர்களாயிருக்கிறார். ஒவ்வொருவரும் பூரணப் பரிசுத்தர். தமது பிரதான ஆசாரிய ஜெபத்தில் கர்த்தராகிய இயேசு தமது பிதாவைப் "பரிசுத்த பிதாவே" என்றழைத்தார் (யோ 17:11). அவளது வயிற்றில் பிறக்கப்போகும் கடவுளின் குழந்தை "பரிசுத்தமுள்ளது" எனப்படுமென்று தேவ தூதன் மரியாளிடம் அறிவித்தான் (லூக் 1:35). திரித்துவத்தின் மூன்றாம் நபரின் பெயரே "பரிசுத்த" ஆவியானவர் என்பதே (யோ 14:26). இறையியல் என்றாலே "பரிசுத்தரின் அறிவுதான்" (நீதி 9:10).

பரந் தன்னில் நீர் பரிசுத்தர், மா பரிசுத்தர், மா பரிசுத்தரே,
பரனே சேனைப்பரனே என்று பகர்ந்தே பார்க்குமளவும்...
மூவாட் களாய் ஒரு வஸ்துவாய் மூலோகமும் ஆளும்பரா
தேவா தந்தை சுதனாவியே தினமுந்துதி உமக்கே! (கீர்த்தனை)

— ஞா. சாமுவேல் ஐயர், தரங்கம்பாடி